# மனித உரிமைகள் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் செயற்பாடுகள்: பயங்கரவாதத்தைத் தடுக்கும் அதே வேளையில், மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரகள் என்பவற்றை மேம்படுத்தி, பாதுகாப்பது தொடர்பான ஐக்கிய நாடுகள் விசேட அறிக்கையாளர் தனது இலங்கை விஜயத்தைப் பூர்த்தி செய்து கொள்கிறார்

## இலங்கைக்கான விஜயத்தின் போது தெரிய வந்த பூர்வாங்க விடயங்கள்

(கொழும்பு, யூலை, 14, 2017) - பயங்கரவாத எதிர்ப்புச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்கள் என்பவற்றை மேம்படுத்தி, பாதுகாப்பது தொடர்பான ஐக்கிய நாடுகள் விசேட அறிக்கையாளர் திரு. பென் எமர்ஸன் அவர்கள் 2017 யூலை மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரையில் இலங்கைக்கான தனது விஜயத்தை மேற்கொண்டார். இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு தனக்கு அழைப்பு விடுத்தமைக்காக அவர் இலங்கை அரசாங்கத்துக்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றார். உள்நாட்டு ஆயுத மோதல் முடிவடைந்த காலம் தொடக்கம் பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தின் போது அதன் சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றில் இலங்கை சாதித்திருக்கும் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதே இந்தப் பயணத்தின் நோக்கமாக இருந்து வந்தது. குறிப்பாக, இந்த முன்னேற்றம் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் பிரகாரம் மதிப்பிடப்படுகின்றது. நாட்டில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் நிலையான சமாதானம் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகளில் இத்தகைய துறைகளில் இலங்கை சாதித்துக் கொள்ளும் முன்னேற்றம் மிக முக்கியமானதாக இருந்து வருகின்றது.

இலங்கைக்கான இந்த உத்தியோகபூர்வ விஜயத்தை துவக்கி வைத்து, அதற்கு வசதி செய்து கொடுக்கும் விடயத்தில் அரசாங்கம் எடுத்துக்காட்டிய வெளிப்படைத்தன்மை குறித்தும், பெருமளவுக்கு வினயமான, ஆக்கபூர்வமான விதத்தில் அது வழங்கிய ஒத்துழைப்புக் குறித்தும் விசேட அறிக்கையாளர் இங்கு தனது பாராட்டுதலை தெரிவித்துக் கொள்கிறார். இது ஒளிவு மறைவற்ற விதத்திலும், பகிரங்கமான விதத்திலும் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்வதற்கு இடமளித்தது. விசேட அறிக்கையாளர் குறிப்பாக அவர் இங்கு சந்தித்த அனைத்து அரச நிறுவனங்களினதும் தலைவர்களுக்கும், இந்த விஜயத்தின் போது அவருக்கு ஆதரவு நல்கிய ஐ நா இலங்கை அணியினருக்கும், அதன் வதிவிட பிரதிநிதிக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றார். பிரதம மந்திரி, ஜனாதிபதியின் செயலாளர், பாதுகாப்பு அமைச்சர், வெளி விவகார அமைச்சர், சட்டம் ஒழுங்கு மற்றும் தென் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர், சிறைச்சாலைகள் சீர்திருத்தம், புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய விவகாரங்கள் அமைச்சர் ஆகியோருடன் ஆக்கபூர்வமான விதத்திலும், தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும் விதத்திலும் கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. மேலும், அவர் பாதுகாப்பு அமைச்சின் பதவி நிலை உத்தியோகத்தர்களின் தலைமை அதிகாரி, கடற்படை, இராணுவம் மற்றும் விமானப்படை என்பவற்றின் தளபதிகள் அல்லது அவர்களுடைய பிரதிநிதிகள், தேசியப் புலனாய்வுப் பிரிவின் தலைவர், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர், பொலிஸ்மா அதிபர், விசேட அதிரடிப் படையின் தலைவர், குற்றவியல் புலனாய்வு திணைக்களத்தின் தலைவர், பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் தலைவர் மற்றும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் ஆகியோரையும் சந்தித்தார். அவர் நீதி அமைச்சரையும் சந்தித்தார்.

விசேட அறிக்கையாளர் மற்றும் அவருடைய அணியினர் சட்டமா அதிபர், பிரதம நீதியரசர், கொழும்பு, அநுராதபுரம் மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோரையும் சந்தித்தார்கள். கொழும்பு புதிய மகஸின் சிறைச்சாலைக்கும், அநுராதபுரம் சிறைச்சாலைக்கும் அவர் விஜயம் செய்ததுடன், அச்சிறைச்சாலைகளில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தடுப்புக் காவல் கைதிகளை தனிப்பட்ட

முறையில் சந்திப்பதற்கான வாய்ப்பும் அவருக்கு வழங்கப்பட்டது. மேலும், ஒரு சில கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மோசமான நிலைமைகளை அவதானிக்கக்கூடிய வாய்ப்பும் அவருக்குக் கிடைத்தது. அத்தகைய கைதிகளின் சட்டத்தரணிகள், குடும்பத்தினர் ஆகியோரையும், இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் கொள்கைகள் என்பவற்றின் காரணமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் ஏனைய தனிநபர்கள் ஆகியோரையும் அவர் சந்தித்தார். இறுதியாக, தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரையும், அதன் ஆணையாளர் ஒருவரையும், சிவில் சமூகத்தின் பிரதிநிதிகளையும் அவர் சந்தித்தார்.

இனங்களுக்கிடையிலான பதட்டநிலையுடன் கூடிய இலங்கையின் நீண்ட, சிக்கலான வரலாற்றையும், அது உருவாக்கியிருக்கும் மிகவும் பாரதூரமான பாதுகாப்புத் துறைச் சவால்களையும் விசேட அறிக்கையாளர் நன்கு அறிந்துள்ளார். இலங்கை சுமார் 26 வருட காலம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் நிகழ்த்தப்பட்ட பயங்கரவாத வன்முறைச் சம்பவங்களை சமாளிக்க வேண்டிய நிலையில் இருந்து வந்தது. இச்சம்பவங்கள் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள், அரசியல் படுகொலைகள் என்பவற்றையும் உள்ளடக்கியிருந்தன. இதன் விளைவாக நாட்டில் ஒரு நீடித்த ஆயுதமோதல் இடம்பெற்றதுடன், அது 2009 ஆம் ஆண்டில் முடிவுக்கு வந்தது.

2015 ஆம் ஆண்டில் இலங்கையில் கூட்டு அரசாங்கமொன்றை நோக்கிய ஒரு நிலைமாற்றம் ஏற்பட்டதுடன், இந்த நிலைமாற்றம் இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கு மத்தியிலும் சீர்திருத்தம், அனைவரையும் உள்ளடக்கிக் கொள்ளல் நீதி மற்றும் மனித உரிமைகள் என்பவற்றுக்கு மதிப்பளித்தல், மரியாதை என்பன குறித்த ஒரு நம்பிக்கையை எடுத்து வந்தது. இந்த மாறுதல் தருணத்தை அடுத்து இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறுதல் மற்றும் மனித உரிமைகள் என்பவற்றை மேம்படுத்துவதற்கான ஒரு சட்டகம் உருவாக்கப்பட்டது. இலங்கை அரசாங்கத்தின் இணை அனுசரணையுடன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 30/1 தீர்மானத்தின் மூலம் இது நிறைவேற்றப்பட்டது. கடந்த காலத்தை எதிர்கொள்ளல், அரசாங்க அதிகாரிகளினால் நிகழ்த்தப்பட்டிருக்கும் குற்றச்செயல்கள் தொடர்பாக அவர்கள் அனுபவித்து வரும் தண்டனை விலக்குரிமைக் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டு வருதல், பொறுப்புக் கூறல், சமாதானம் மற்றும் நீதி என்பவற்றை உத்தரவாதப்படுத்துதல், நிலைத்து நிற்கக்கூடிய நல்லிணக்க நிலையை எடுத்து வருதல் மற்றும் கடந்த காலத்தில் மோதலின் இரு தரப்பினராலும் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல் சம்பவங்கள் மீள இடம்பெறுவதனைத் தடுத்தல் என்பவற்றை இத்தீர்மானம் பிரதிநிதித்துவம் செய்து, பிரதிபலித்தது.

எவ்வாறிருப்பினும் இரண்டு வருடங்களுக்குப் பின்னர், இப்பொழுது மனித உரிமைகள் பேரவையினால் இலங்கைக்கு வழங்கப்பட்டிருந்த இரண்டு வருட கால அவகாசத்திற்குள் 4 மாதங்கள் கடந்து சென்றிருக்கும் நிலையில் இந்தத் தீர்மானத்தில் எடுத்து விளக்கப்பட்டிருக்கும் முதன்மையான குறிக்கோள்களைச் சாதித்துக் கொள்ளும் விடயத்தில் முன்னேற்றம் மந்த கதியில் இடம்பெற்று வந்திருப்பது மட்டுமன்றி அந்த முன்னேற்றம் அநேகமாக ஸ்தம்பித நிலையை எட்டியிருப்பது போல் தெரிகின்றது. நிலைமாறுகால நீதி தொடர்பான இலங்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றி வைப்பதற்கென முன்னெடுக்கப்பட்ட எந்த ஒரு வழிமுறையும் உண்மையான முன்னேற்றத்தை சாதித்துக் கொள்வதற்குப் போதியதாக இருந்து வரவில்லை. போர்க் குற்றங்களை நிகழ்த்தியிருக்கும் இலங்கையின் பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் நீதியின் முன் எடுத்து வரப்படுவதனைக் காட்டும் மிகக் குறைந்தளவிலான சான்றுகளே இருந்து வருகின்றன.

பயங்கரவாத எதிர்ப்புச் செயற்பாடுகள் தொடர்பான தற்போதைய சீர்திருத்த செயன்முறை பூர்த்தியடைந்த பின்னர் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை ஸ்தாபிப்பதற்கான சட்டவாக்கத்தை உருவாக்குவதற்கும், மோதலின் போது இரு தரப்புக்களாலும் நிகழ்த்தப்பட்ட மிகக் கொடூரமான செயல்களுடன் சம்பந்தப்பட்டிருக்கும் நபர்களுக்கெதிராக குற்றவியல் குற்றச்சாட்டுக்களை முன்னெடுக்கும் பொருட்டு வழக்குத் தொடுனர் அலுவலகம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென பிரதம மந்திரி அவர்களால் விசேட

அறிக்கையாளருக்கு ஒரு தனிப்பட்ட உத்தரவாதம் வழங்கப்பட்டது. இவை உண்மையிலேயே அரசாங்கம் சர்வதேச சமூகத்திடம் வாக்குறுதி அளித்திருந்த நடவடிக்கைகள் ஆகும். அவற்றை அரசாங்கம் இப்பொழுது முழுமையாக நிறைவேற்றியிருக்க வேண்டும்.

இத்திசையை நோக்கிய ஒரு சாதகமான நகர்வைக் காட்டும் ஒரு சில இலேசான குறிகாட்டிகளாக இவை இருந்து வருகின்றன என்பதனை நியாயமாகக் குறிப்பிடுதல் வேண்டும். விசேட அறிக்கையாளரின் விஜயத்தின் போது இராணுவத் தளபதி திரு. மகேஷ் சேனாநாயக்க குற்றச் செயல்களை நிகழ்த்தியிருக்கும் ஆயுதப் படைகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் சட்டத்தின் முன் எடுத்து வரப்படுவார்கள் என பகிரங்கமான ஒரு கடப்பாட்டினை வெளிப்படுத்தியிருந்தார்; போரின் இறுதிக் கட்டங்களின் போது 11 பொதுமக்கள் காணாமற்போன சம்பவத்துடன் சம்பந்தப்பட்டிருந்தவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஒரு சிரேஷ்ட கடற்படைக் கொமாண்டர் கைது செய்யப்பட்டுள்ளார். இராணுவத்தினருக்கெதிரான குற்றவியல் குற்றச்சாட்டுக்கள் தனது அலுவலகத்துக்கு வந்து சேரும் சந்தர்ப்பத்தில் சட்டத்தின் முழு வீச்சுடன் அத்தகைய வழக்குகள் முன்னெடுக்கப்படுமென சட்டமா அதிபர் விசேட அறிக்கையாளருக்கு உத்தரவாதமளித்தார். இலங்கையில் நிலையான சமாதானத்தைச் சாதித்துக் கொள்ள வேண்டுமானால் நாட்டின் சட்டத்தை வலுவுக்கிடும் நிறுவனங்கள் தமிழ் மற்றும் முஸ்லிம் சிறுபான்மைச் சமூகத்தினரையும் உள்ளடக்கிய விதத்தில் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரது நம்பிக்கையை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற விடயத்தை சட்டமா அதிபர் அங்கீகரித்தார்.

ஆனால், இத்தகைய குறிகாட்டிகள் அது எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளுக்கான நிலையான, நீதியான ஒரு தீர்வினைச் சாதித்துக் கொள்வது தொடர்பான இலங்கையின் சர்வதேச கடப்பாட்டினை முழுமையாகப் பூர்த்தி செய்யவில்லை. நாட்டில் வாழும் அனைத்துச் சமூகங்களினதும் நலனைக் கருத்தில் கொண்டு நிலைமாறு கால நீதி தொடர்பான பயனுள்ள கட்டமைப்பொன்றை ஸ்தாபிக்கப் போவதாக அரசாங்கம் சர்வதேச சமூகத்துக்கு வாக்குறுதி அளித்திருந்தது. இந்தக் கட்டமைப்பு சமத்துவம் மற்றும் பொறுப்புக்கூறல் கோட்பாடுகளினால் நிர்வகிக்கப்படுமென்றும், பாதுகாப்புத் துறையில் அவசரமாகத் தேவைப்படும் அத்தியாவசியமான சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கென அது ஸ்தாபிக்கப்படுமெனவும் கூறப்பட்டிருந்தது.

மன்னிப்பு வழங்குவது தொடர்பான ஒரு பூர்வாங்க நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது. அதாவது, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் சம்மந்தப்பட்டவர்கள் எனக் கருதப்படும் நபர்கள் கணிசமானளவிலான புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டமொன்றில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார்கள். அதேவேளையில் பலர் PTA என அழைக்கப்படும் மிக மோசமான, குறைபாடுகளுடன் கூடிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இச் சட்டம் 1979 ஆம் ஆண்டில் ஒரு அவசரகால வழிமுறையாக தற்காலிகமாக இயற்றப்பட்டது. அதன் பின்னர் அது 1982 ஆம் ஆண்டில் நிரந்தரமாக்கப்பட்டதுடன், இன்று வரையில் சட்டப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது. குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களுக்கான ஒரேயொரு மூலம் என்ற விதத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் வழங்கப்படும் (வேறு சாட்சியங்களினால் நிரூபிக்கப்படாத) ஒப்புதல் வாக்குமூலங்களைச் செயற்படுத்துவதற்கு இடமளிக்கும் விதிவிலக்கான ஏற்பாடுகளுக்கூடாக ஒரு முறைமைசார்ந்த விதத்தில் தொடர்ச்சியாக சித்திரவதையைப் பயன்படுத்தும் நிலைமையை இச்சட்டம் போசித்து வளர்த்து வந்துள்ளது. ஒட்டுமொத்தச் சமூகங்களும் களங்கப்படுத்தப்பட்டு, துன்புறுத்தல், தன்னிச்சையான கைது மற்றும் தடுத்து வைத்தல் என்பவற்றுக்கான இலக்குகளாகக் கொள்ளப்பட்டுள்ளனர். தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் மறைமுகமான விதத்திலாவது ஏதேனும் தொடர்புகளைக் கொண்டுள்ளார் என சந்தேகிக்கப்படும் எந்த ஒரு நபரும் தடுப்புக்காவல் மற்றும் சித்திரவதை என்பவற்றை எதிர்கொள்ளும் உடனடி ஆபத்தைக் கொண்டுள்ளார்.

சித்திரவதையை பிரயோகிப்பது தொடர்பாக ‘எவ்விதத்திலும் சகித்துக் கொள்ளாத கொள்கை’ ஒன்றை அரசாங்கம் அண்மையில் ஏற்றுக் கொண்டிருக்கும் விடயம் குறித்து விசேட அறிக்கையாளர் உற்சாகமடைகின்றார்; மேலும், பொலிஸாரினால் மேற்கொள்ளப்படும் சித்திரவதைச் செயற்பாடுகளை ஒழிப்பதற்கென 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் ஒரு கமிட்டியும் நியமனம் செய்யப்பட்டது. எவ்வாறிருப்பினும், இலங்கையைப் பொறுத்தவரையில் அத்தகைய நடைமுறைகள் பாதுகாப்புத் துறையில் ஆழமாக வேரூன்றியிருப்பதுடன், தேசியப் பாதுகாப்புக் காரணங்களின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தடுப்புக்காவல் கைதிகளைப் பொறுத்தவரையில் சித்திரவதையைப் பயன்படுத்தும் நிலை இன்னமும் பரவலான வழமையான ஒரு செயற்பாடாக இருந்து வருகின்றது என்ற முடிவுக்கு வருவதற்கு அனைத்துச் சான்றுகளும் காணப்படுகின்றன. அதிகாரிகள் தமிழ் சமூகத்தின் உறுப்பினர்களுக்கெதிராக இந்தச் சட்டவாக்கத்தை விகிதாசாரத்திலும் பார்க்க மிதமிஞ்சிய அளவில் பயன்படுத்தி வரும் காரணத்தினால் இச்சமூகமே நன்றாக எண்ணை ஊற்றி இயக்கப்பட்டு வரும் அரசாங்கத்தின் சித்திரவதைக் கருவியின் சுமையைத் தாங்க வேண்டியிருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில், 2016 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நபர்களில் 80 சதவீதத்தினர் தமது கைதினை அடுத்து தாம் சத்திரவதைக்கும், உடல்ரீதியான துன்புறுத்தலுக்கும் உள்ளாக்கப்பட்டதாக முறைப்பாடு செய்திருக்கும் விடயம் குறித்து விசேட ஆணையாளர் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளார். இந்த வழக்குகள் பின்னர் சாதாரண குற்றவியல் சட்டத்தின் கீழ் எடுத்து வரப்பட்டிருந்தன. தடுப்புக் காவல் கைதிகளைச் சித்திரவதை செய்யும் செயற்பாடு குறித்துக் கவனம் செலுத்துவது, தமது பணியின் ஒரு முன்னுரிமைப் பாகமாக இருந்து வருகின்றது என்ற விடயத்தை மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியிருப்பதுடன், அது அவசியமாக கவனத்திலெடுக்கப்பட வேண்டிய மனித உரிமைகள் கரிசனையாகயிருந்து வருகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளது. கொழும்பில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் வழக்குகளுக்குப் பொறுப்பாக இருந்து வரும் மூத்த நீதிபதி ஒருவர், 2017 வரையில் அவர் கையாண்டிருக்கும் வழக்குகளில் 90 சதவீதத்துக்கு மேற்பட்ட வழக்குகளில் குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் பலவந்தத்தைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது அச்சுறுத்தலைப் பயன்படுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால் அத்தகைய சாட்சியங்களை நீக்க வேண்டிய நிர்ப்பந்தம் தனக்கு ஏற்பட்டதாக விசேட ஆணையாளரிடம் தெரிவித்தார். அவை சுயவிருப்பில் வழங்கப்பட்ட வாக்குமூலங்களாக இருந்து வரவில்லை.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் முன்னர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த கைதிகள் மற்றும் தற்பொழுது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் ஆகியோருடன் நடத்திய நேர்காணல்களின் போது மிகவும் கொடூரமான சித்திரவதை வடிவங்கள் தொடர்பான கதைகளை அவர் செவிமடுக்க நேரிட்டது. பொல்லுகளைக் கொண்டு அடித்தல், உடலை அழுத்தும் செயற்பாடுகளின் பிரயோகம், மண்ணெண்ணை நிரப்பிய பிளாஸ்ரிக் பைகளைப் பயன்படுத்தி மூச்சுத்திணற வைத்தல், நகங்களைப் பிடுங்கியெடுத்தல், நகங்களுக்குள் ஊசிகளை ஏற்றுதல், நீரின் மூலம் செய்யப்படும் பல்வேறு விதமான சித்திரவதைச் செயல்கள், ஆட்களைப் பல மணித்தியாலம் பெருவிரலில் தொங்க விடுதல் மற்றும் அந்தரங்க உறுப்புக்களைச் சிதைத்தல் என்பனவும் இவற்றில் அடங்குகின்றன. விசேட அறிக்கையாளரின் கவனத்துக்கு எடுத்து வரப்பட்ட பல சம்பவங்களில் இத்தகைய குற்றச்சாட்டுக்கள் ஒன்றில் சுயாதீனமான மருத்துவச் சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன; அல்லது வழக்கு விசாரணையின் போது குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை நிராகரிப்பதற்கான ஒரு அடிப்படையாக நீதிமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

சித்திரவதை செய்யும் கடும் மன அதிர்ச்சியூட்டும் நடைமுறை இலங்கையில் நிலவி வரும் நிலையிலும் கூட, அத்தகைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக வினைத்திறன் மிக்க விதத்தில் புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதில்லை என்ற விடயத்தை விசேட அறிக்கையாளர் இங்கு

குறிப்பிட விரும்புகின்றார். அண்மைக்கால உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்கள் தொடர்பாக விடுக்கப்பட்ட ஒரு வேண்டுகோளுக்கு ஏற்ப அவருக்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், சந்தேக நபர்களை சித்திரவதைக்குட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் 71 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக மட்டுமே வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தது. இப்பொழுது தனிநபர் ஒருவர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பொழுது அந்த விடயம் வழமையாக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு தெரிவிக்கப்படுகின்றது என்ற விடயத்தையும், அத்தகைய தடுப்புக் காவல் நிலையங்களைத் தடையின்றி அணுகக்கூடிய வாய்ப்பு இந்த ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது என்ற விடயத்தையும் அறிக்கையாளர் இங்கு குறிப்பிட விரும்புகிறார். எவ்வாறிருப்பினும், குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களுக்கூடாக குற்றவாளியாக்கப்படும் நடைமுறை வேரூன்றியிருக்கும் கட்டமைப்பில் இதுவும், ஏனைய பாதுகாப்பு வழிமுறைகளும் மிகவும் கோழைத்தனமான இத்தகைய சர்வதேச குற்றச் செயல்களுக்கெதிராக சந்தேக நபர்களைப் பாதுகாக்கும் விடயத்தில் எந்த வகையிலும் போதுமானதாகயிருந்து வரவில்லை.

குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களைப் பெற்றுக் கொள்ளுவதற்காக முறையான ஒழுங்கில் சித்திரவதையைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குகளை நடத்தும் சட்டகத்தில் ஆழமாக வேரூன்றியிருக்கும் கண்டிக்கத்தக்க விதத்திலான தாமதங்களின் பின்னணியில் கவனத்திலெடுக்க வேண்டியிருக்கின்றது. தடுப்புக் காவல் நீட்டிக்கப்படுதல் மற்றும் அப்பட்டமான விதத்தில் நீண்ட காலமாக இழுத்தடித்துச் செல்லப்படும் குற்றவியல் வழக்கு நடைமுறைகள் என்பவற்றின் கூட்டினூடாகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கும் சந்தேக நபர்கள் எந்த ஒரு குற்றச்செயல் தொடர்பாகவும் குற்றவாளியாக்கப்படாத நிலையிலும், அவர்களுடைய தடுப்புக்காவல் நிலை தொடர்பான எத்தகைய மீளாய்வும் மேற்கொள்ளப்படாத நிலையிலும் பல வருட காலம் மிகவும் மோசமான மனிதாபிமானமற்ற நிலைமைகளின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

இலங்கையில் இன்னமும் அமுலில் இருந்து வரும் முறைமையின் கீழ், வழக்குத் தொடுக்கும் அதிகாரியான சட்டமா அதிபர் எந்த ஒரு பிணை விண்ணப்பம் தொடர்பாகவும் இறுதி முடிவை எடுக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளார். கடந்த காலத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான வழக்குகள் தொடர்பாக பிணை விண்ணப்பங்களுக்கு அனுமதியளிப்பதற்கு அவர் முற்றிலும் மறுப்புத் தெரிவித்துள்ளார். எனினும் இந்நடைமுறையில் அண்மைக்காலத்தில் ஒரு மாற்றம் ஏற்படத் தொடங்கியுள்ளது. இதன் விளைவாக நீதித் துறையின் கைகள் நிறைவேற்றுத் துறையினால் சட்டவிரோதமான விதத்தில் கட்டப்பட்டுள்ளது. இது சட்டத்தின் ஆட்சிக்கும், எவ்விதத்திலும் பொருத்தமான ஒரு செயற்பாடாக இருந்து வரவில்லை அல்லது ஜனநாயக நீதியின் அடிப்படைக் கருதுகோள்களுக்கும் எவ்விதத்திலும் பொருந்தக்கூடிய ஒரு செயற்பாடாகயிருந்து வரவில்லை.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பல்வேறு பிரிவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நபர்களை விசேட அறிக்கையாளர் சந்தித்ததுடன், அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் காலப்பிரிவு இரட்டை இலக்க வருடங்கள் வரையில் நீடித்துச் செல்வதனைக் கண்டறிந்து கொண்டார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தற்பொழுது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருக்கும் நபர்கள் குறித்த உத்தியோகபூர்வமான புள்ளிவிபரங்கள் வழங்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோள் விடுக்கப்பட்ட பொழுது, அவருக்கு அது தொடர்பான புள்ளிவிபரங்கள் வழங்கப்பட்டன. அவற்றின் பிரகாரம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் 81 கைதிகளில் 70 பேர் 5 வருடங்களுக்கும் மேல் எவ்வித வழக்கு விசாரணைகளில்லாமல் அவ்விதம் வைக்கப்பட்டுள்ளார்கள் என்பதனையும், 12 பேர் 10 வருடங்களுக்கு மேல் வழக்கு விசாரணையின்றி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள் என்பதனையும் அறிந்து கொள்ள முடிகின்றது. இத்தகைய வியப்பூட்டும் புள்ளிவிபரங்கள் இலங்கையின் சர்வதேச நன்மதிப்பின் மீது ஒரு களங்கத்தை எடுத்து வருகின்றது. இத்தகைய நபர்களை உடனடியாக பிணையில் விடுவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்; அல்லது பல வருட காலம், பல தசாப்த காலம்

எடுக்காமல் ஒரு சில வாரங்களுக்குள் அல்லது மாதங்களுக்குள் அவர்களுக்கெதிராக வழக்குகள் விசாரணைக்கெடுக்கப்படுதல் வேண்டும். இந்த ஒட்டுமொத்த தற்போதைய பயங்கரவாத தடுப்புச் சட்ட நடை முறைமையும் அது இதுவரையில் செயற்பட்டு வந்துள்ள நிலையிலும் தற்போதைய வழக்குகள் தொடர்பாக தொடர்ந்து செயற்பட்டு வரும் நிலையிலும் அப்பட்டமாக நீதியை மறுக்கும் ஒரு முறைமையாக இருந்து வருகின்றது.

இன்னமும் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் நபர்களின் தடுப்புக்காவல் நிலைமையின் சட்டபூர்வ தன்மை குறித்த வினைத்திறன் மிக்க நீதித்துறை மீளாய்வொன்றை மேற்கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், உரிய செயன்முறைக்கான உத்தரவாதங்களுடன் கூடிய விதத்தில் பயங்கரவாதச் தடைச் சட்டத்தின் கீழ் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கும் நபர்களை நியாயமான ஒரு வழக்கு நடைமுறைக்கு உட்படுத்த வேண்டுமென்றும் இலங்கை அரசாங்கத்திடம் விசேட அறிக்கையாளர் கேட்டுக்கொள்கின்றார். மேலும், பொலிஸ் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் அனைத்து சித்திரவதை சம்பவங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களையும் விசாரணை செய்வதற்கு வினைதிறன்மிக்க ஒரு பொறிமுறையை உருவாக்க வேண்டுமென்றும், பொலிஸாரினால் பெறப்பட்டிருந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் சாட்சியத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கும் பயங்கரவாதச் தடைச் சட்டத்தின் கீழான வழக்குகளில் சம்மந்தப்பட்டிருக்கும் கைதிகளின் பாதுகாப்பினை மீளாய்வு செய்வதற்கும் அரசாங்கம் ஒரு வினைத்திறன்மிக்க பொறிமுறையை உருவாக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொள்கின்றார்.

அப்படியானால் இதற்கு அரசாங்கத்தினதும் அதன் அதிகாரிகளினதும் பதில் என்ன? பாரியளவிலான இந்த அநீதியை குறைத்துக் கொள்ளும் பொருட்டு தனது அலுவலகம் பயங்கரவாதச் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் அனைத்துச் சம்பவங்கள் தொடர்பாகவும் இரண்டு வருட கால மீளாய்வென்றை நடத்தியதாக சட்டமா அதிபர் விசேட அறிக்கையாளரிடம் தெரிவித்தார். பிணைகளுக்கு அனுமதி வழங்குவதற்கான நிறைவேற்றுத் தீர்மானங்களை மேற்கொள்வதற்காகவும், தனிநபர்களை புனர்வாழ்வளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அனுப்பி வைப்பதற்காக அல்லது பொருத்தமான சந்தர்ப்பங்களில் குற்றவியல் குற்றச்சாட்டுக்களைக் குறைப்பதற்காக அல்லது கைவிட்டுவிடுவதற்காக இந்த மீளாய்வு மேற்கொள்ளப்பட்டதாக அவர் சொன்னார். இந்த அமைப்பில் நீண்ட காலம் தேங்கிக்கிடந்த ஒரு சில வழக்குகளைக் குறைத்துக் கொள்ளும் நோக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த முன்முயற்சி உண்மையிலேயே வரவேற்கப்பட வேண்டியதாகும். எவ்வாறிருப்பினும், போலியான குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களின் மூலம் பெருந்தொகையானவர்கள் 12 வருடங்களாக இன்னமும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்ற விடயத்துக்கு இது தீர்வினை வழங்கவில்லை. அவர்கள் இதுவரையில் நீதியின் முன்னால் எடுத்து வரப்பட்டிருக்கவில்லை.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் புதிய கைதுகளைத் தவிர்த்துக் கொள்வதற்கும், சாத்தியமான சந்தர்ப்பங்களில் சாதாரண குற்றவியல் சட்டத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் இப்பொழுது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக சட்டம் மற்றும் ஒழுங்குகளுக்கான அமைச்சர் விசேட அறிக்கையாளரிடம் தெரிவித்தார். அதுவும் கூட வரவேற்கத்தக்க ஒரு விடயமாகும். பொதுவான குற்றவியல் சட்டத்தின் கீழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரிடம் வழங்கப்படும் குற்ற வாக்கு மூலத்தை ஏற்றுக்கொள்ள முடியாதிருப்பது மட்டுமன்றி, சித்திரவதையின் மூலம் அத்தகைய வாக்குமூலங்களைப் பெற்றுக்கொண்டிருக்கக்கூடிய வழமையான அபாயத்தைத் தவிர்த்துக் கொள்வதற்கும் இது உதவ முடியும் என்பதனால் இந்த விடயம் வரவேற்கப்படுகின்றது. அண்மைய மாதங்களில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பாவனையில் செங்குத்தான ஒரு வீழ்ச்சி ஏற்பட்டிருக்கும் விடயம் குறித்து விசேட அறிக்கையாளர் திருப்தி அடைகின்றார். எவ்வாறிருப்பினும், அண்மைக்காலத்தில் வடமாகானத்தில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்ற விடயத்தையும் அவர் அறிந்துள்ளார். அத்தகைய சம்பவங்களில் ஆட்கள் இச் சட்டத்தின் கீழ்

கைது செய்யப்பட்டிருப்பதுடன், இச் சட்டம் தொடர்ந்தும் நாட்டின் சட்டப் புத்தகத்தில் இடம்பெற்று வருகின்றது. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவாக்கம் மற்றும் சீர்திருத்தங்களுக்கான யோசனைகள் என்பவற்றின் மீளாய்வு தற்போது இடம்பெற்று வருகின்றது. மேலும், புதிய வழக்குகளில் பயங்கரவாதச் தடைச் சட்டத்தைக் குறைப்பதற்கான தொடர் நடவடிக்கைகள் பலவருட காலம் வழக்கு விசாரணை எதுவுமின்றி மிகவும் மோசமான நிலைமைகளில் துன்பங்களை அனுபவித்து வரும் ஆட்களைப் பொறுத்தவரையில் எவ்விதமான ஆறுதலையும் வழங்கப்போவதில்லை.

தற்போது விசாரிக்கப்பட்டு வரும் பயங்கரவாதச் தடைச் சட்ட வழக்குகளில் நீதிச் செயன்முறை கவலையளிக்கத்தக்க விதத்தில் மிகவும் மந்தகதியில் இடம்பெற்று வரும் நிலையில், எதிர்த்தரப்பில் இடம்பெற்று வரும் மெதுவான முன்னேற்றம் காரணமாகவே இந்தத் தாமதமிடம்பெற்று வருகின்றதென்ற யோசனையைத் தெரிவிப்பதற்கு அரசாங்கத்தின் சார்பில் கருத்துத் தெரிவித்த பலர் முயற்சித்தார்கள். இதனை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது. மற்றும் இது ஒரு போதிய விளக்கமாகவுமிருக்கவில்லை. தற்போதைய நீதிமன்ற வளங்கள் மற்றும் வழக்குத் தொடுக்கும் வளங்கள் பெருமளவுக்கு வரையறுக்கப்பட்டிருப்பதாக சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த ஒரு மூத்த அதிகாரி தெரிவித்தார். ‘‘கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாக’’ இருந்து வருவதாக அவருடைய வார்த்தைகளிலேயே அவர் கூறினார். ஆகவே, இது முன்னைய கருத்தை நிராகரிப்பதாக இருக்கின்றது. பயங்கரவாதத் தடைச்சட்ட வழக்குகளை மட்டுமே கையாள்வதற்கென இரண்டு விசேட உயர் நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டிருக்கும் விடயத்தை விசேட அறிக்கையாளர் இங்கு கவனத்தில் எடுப்பதுடன், இந்த நீதிமன்றங்கள் வளப் பற்றாக்குறையையும், ஆள் பற்றாக்குறையையும் எதிர்கொண்டுள்ளன. எமக்குக் கிடைத்திருக்கும் மிகப் பிந்திய புள்ளிவிபரங்களின் பிரகாரம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் 108 நபர்கள் இன்னமும் கூட இருந்து வருகின்றார்கள். அவர்களில் சிலர் குற்றம் சாட்டப்பட்டவர்களாகவும் சிலர் குற்றம் சாட்டப்படாதவர்களாகவும் உள்ளனர்.

2015 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் 30/1 க்கூடாக பயங்கரவாதச் தடைச் சட்டத்தை ஒழிப்பதற்கும், அதற்குப் பதிலாக சமகால சர்வதேச சிறந்த நடைமுறைகளின் பிரகாரம் பயங்கரவாத எதிர்ப்பு சட்டவாக்கம் ஒன்றை எடுத்து வருவதற்கும் இலங்கை அரசாங்கம் உடன்பட்டிருந்தது. இலங்கையின் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவாக்கத்தின் கொள்கை மற்றும் சட்டரீதியான சட்டகம் என்பவற்றுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்திருப்பதுடன், அந்த ஆவணம் விசேட அறிக்கையாளர் இலங்கைக்கான விஜயத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் அவரிடம் வழங்கப்பட்டிருந்தது.

விசேட அறிக்கையாருடன் கலந்துரையாடிய பலர் இந்த முன்மொழிவுகள் தொடர்பாக அமைச்சர்கள் மட்டத்திலும், பாராளுமன்ற மட்டத்திலும் அல்லது பொதுமக்களுக்கு மத்தியிலும் கலந்தாராய்வுகள் இடம்பெறாத விடயம் குறித்து தமது மனக்கிலேசத்தை வெளிப்படுத்தியிருந்தனர். உண்மையிலேயே இந்த வரைவு சட்டகம் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குத் தெரிவிக்கப்படவில்லை அல்லது அதன் கருத்துக்கள் கேட்கப்படவில்லை. எவ்வாறிருப்பினும், தற்போதைய வரைவு ஒரு சில விருத்தி நிலைமைகளை எடுத்துக் காட்டுகின்றது. குறிப்பாக, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் நபர்களை அணுகுவதற்கு அது மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கட்டற்ற விதத்தில் வாய்ப்பினை வழங்குவதுடன்,பிணை வழங்குவது தொடர்பாக சட்டமா அதிபர் கொண்டிருக்கும் வீட்டோ அதிகாரத்தை இல்லாதொழிக்கின்றது. சுயாதீனமான நீதித்துறை மீளாய்வுக்கான அதிகளவிலான செயற்பரப்பை வழங்குவதுடன் இணைந்த விதத்தில் அது நிர்வாக மற்றும் வழக்கு விசாரணைக்கு முன்னரான தடுத்து வைப்புக்கள் தொடடர்பான விருத்தியடைந்த ஒரு சட்டகத்தை உருாக்குகின்றது.

எவ்வாறிருப்பினும், தற்போதைய சட்ட வரைவில் முக்கியமான பல குறைபாடுகள் காணப்படுகின்றன. அது சட்டமாக்கப்பட்டால் பயங்கரவாதச் சந்தேக நபர்களின் மனித உரிமை மீறல்கள் தொடர்ச்சியாக இடம்பெறுவதனை உறுதிப்படுத்த முடியும். ஏனெனில் இந்தக் குறைபாடுகளில் முதன்மையான குறைபாடு பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரிடம் வழங்கப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்றுக் கொள்ளும் ஏற்பாடு தக்கவைத்துக் கொள்ளப்பட்டிருப்பதாகும். தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பவர்கள் துன்புறுத்தப்படும் நிலைமை பாரதூரமானதாகவும், ஒரு பரவலான பிரச்சினையாகவுமிருந்து வரும் ஒரு நாட்டில் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலமொன்று சர்வதேச மனித உரிமைகள் தர நியமங்களுக்கு இணங்கி ஒழுகக்கூடிய ஒரேயொரு வழிமுறை, சட்டவாக்கத்தின் இறுதி வரைவில் பொலிஸ் உத்தியோகத்தரிடம் வழங்கப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் பயன்பாட்டினை ஒட்டுமொத்தமாக தடை செய்வதாகயிருக்க முடியும். இதுவே, நல்ல காரணத்துக்காக இலங்கையின் பொதுச் சட்டத்தின் கீழான நிலைமையாக இருந்து வருகின்றது. சித்திரவதை இடம்பெறக்கூடிய ஆபத்து உயர் மட்டத்தில் இருந்து வரும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டவாக்கத்தின் கீழும் கட்டாயமாக அந்நிலைமையிருந்து வருதல் வேண்டும். மேலும், பயங்கரவாதத்துக்கு வழங்கப்பட்டிருக்கும் வரைவிலக்கணத்தின் விரிவு தொடர்பாகவும் பிரச்சினைகள் காணப்படுகின்றன. அது பயங்கரவாதத்துடன் சம்பந்தப்பட்ட உண்மையான செயல்பாடுகளுக்கப்பால் நிலவும் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கும் இந்தச் சட்டவாக்கம் பிரயோகிக்கப்படக்கூடிய ஆபத்தை எடுத்து வருகின்றது; அல்லது சிறுபான்மைச் சமூகத்தினருக்கெதிராக அல்லது மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கு எதிராக வகை தொகையற்ற விதத்திலும், பக்கச்சார்பான விதத்திலும் பயன்படுத்தக்கூடிய ஆபத்தினை எடுத்து வருகின்றது. சாட்சிகளைச் சேகரிக்கும் விடயம் தொடர்பாக இந்த வரைவின் ஏற்பாடுகளிலும் பாரதூரமான பல பிரச்சினைகள் காணப்படுகின்றன.

மேலும், இந்த வரைவுச் சட்டம் ஒரு சில முக்கியமான அம்சங்களைப் பொறுத்தவரையில் அனைவரையும் உள்ளடக்காத ஒரு சட்டமாகவும், வெளிநாட்டுப் பயங்கரவாதப் போராளிகள் இருந்து வரும் நிலை போன்ற நவீன பயங்கரவாத சூழலை கவனத்திலெடுக்காத ஒரு சட்டமாகவும் இருந்து வருகின்றது.

இதுவரையில் இச் சட்டவாக்கத்தில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றம் கவலையளிக்கத்தக்க விதத்தில் மந்தமானதாகயிருந்து வருவதுடன், இது மறுபுறத்தில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் வழங்கப்போவதாக இலங்கை தனது கடப்பாட்டைத்தெரிவித்திருந்த நிலைமாறு கால நீதி வழிமுறைகளின் பரவலான தொகுதியினையும் தாமதப்படுத்தியுள்ளது. இந்த செயலற்ற நிலை பாதுகாப்புத் துறையிலிருந்து வரும் குறுகிய நலன்களைக் கொண்டிருக்கும் ஒரு சில தரப்பினரின் தொடர்ச்சியான செல்வாக்கினைப் பிரதிபலிக்கின்றது என்ற முடிவுக்கு வருவதனைத் தவிர்க்க முடியவில்லை. அத்தகையவர்கள் மாற்றங்களையும், அனைத்திற்கும் மேலாகப் பொறுப்புக்கூறும் நிலையையும் எதிர்த்து நிற்பவர்களாகயிருந்து வருகின்றார்கள்.

வரைவுச் சட்டவாக்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் அதனை விருத்தி செய்யும் ஒரு முயற்சியாக என்னுடைய பணிப்பாணையுடன் இணைந்த விதத்தில் ஆக்கபூர்வமான உரையாடல் செயன்முறை ஒன்றில் ஈடுபடுவதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது என்ற விடயத்தை இன்று நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இச்சட்டவாக்கத்தை இலங்கையின் புதிய ஒழுங்கில் ஒரு மயில் கல்லாக இடம்பெறச் செய்வதற்கும் அதனை சரிப்படுத்திக் கொள்வதற்கும் இன்னமும் காலம் இருக்கின்றது. அடுத்து வரும் இரண்டு வார காலப்பிரிவில் ஜெனீவாவில் இருக்கும் எனது அணியினருடன் கலந்தாலோசனைகளை நிகழ்த்துவதற்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு பொறுப்பேற்றுள்ளது. இந்த உரையாடலின் நோக்கம் தற்போதைய வரைவில் காணப்படும் குறைபாடுகளை இனங்காண்பதும், அவற்றை நிவர்த்தி செய்வதற்கான தீர்வுகளைக் கண்டறிவதுமாகும்.

எனவே, முடிவாக சற்று நின்று நிதானித்து ஒட்டுமொத்த சித்திரத்தையும் மீண்டும் ஒரு முறை நோக்குவது அவசியமாகும். நல்ல நோக்கத்துடன் கூடிய விதத்தில் பல கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால், மோதலுக்கு நிலையான மற்றும் நீதியான தீர்வை எடுத்து வரும் பொருட்டு வினைத்திறன்மிக்க விதத்திலான செயல்பாடுகள் மிகச் சிறிய அளவிலேயே முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதாவது, அத்தகைய ஒரு தீர்வே சமூகத்தின் அனைத்துப் பிரிவினரதும் நம்பிக்கையை வென்றெடுக்க முடியும். ஆகக்குறைந்தது இப்பொழுது அத்திசையை நோக்கிய சிறு சிறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவது போல் தெரிகின்றது. அரசாங்கத்திடமும், இலங்கை வாழ் மக்களிடமும் நான் விடுக்கும் வேண்டுகோள் அவை சரியான நடவடிக்கைகளாகயிருந்து வர வேண்டுமென்பதும், பாதுகாப்புத் துறையிலிருக்கும் பிற்போக்குவாதச் சக்திகளினாலும், அரசாங்கத்திலிருக்கும் அவர்களுடைய சகாக்களும் அச்செயன்முறையைத் திசைதிருப்புவதற்கு இடமளிக்க வேண்டாம் என்பதுமாகும்.

பொறுப்புக்கூறல் சமநிலையின் இரு பக்கங்களையும் புறம்பாக எடுத்து நோக்கும் பொழுது, அதன் விளைவாகத் தோன்றும் சித்திரம் இருண்டதாகவே இருந்து வருகின்றது: மோதல் இடம்பெற்ற காலப்பிரிவின் போதும், அதன் பின்னரும் அப்பட்டமான மனித உரிமை மீறல்களை நிகழ்த்தியிருக்கும் பாதுகாப்புப் படைகள் மற்றும் பாதுகாப்புச் சேவைகளைச் சேர்ந்த உறுப்பினர்களைப் பொறுப்புக்கூற வைப்பதற்கென அரசாங்கம் இதுவரையில் அநேகமாக எதனையும் செய்திருக்கவில்லை. அதேவேளையில், குரூரமான மற்றும் அநீதியான பயங்கரவாதத் தடுப்புச்சட்ட முறைமையை அது இன்னமும் செயற்படுத்தி வருகின்றது. இம்முறைமை தமிழ் சிறுபான்மைச் சமூகத்தின் மீது பாரியளவிலான ஒரு தாக்கத்தையெடுத்து வந்துள்ளது. இத்தகைய நிலைமைகள் அநேகமாக மக்கள் மத்தியில் ஆறாத வடுக்களாகயிருந்து வரக்கூடிய மனக்குறைகளைத் தோற்றுவிக்கக்கூடிய நிலைமைகளாகயிருந்து வருகின்றன. அவை பதற்ற நிலைமைகளைப் போசித்து வளர்த்து, மோதல் நிலைமைகளைக் கூட தூண்ட முடியும்.

ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர் மனித உரிமைகள் பேரவையின் 35 ஆவது அமர்வின் ஆரம்ப உரையில் குறிப்பிட்டதைப் போல:

> ‘‘பயங்கரவாத எதிர்ப்புச் செயற்பாடுகள் தொடர்பாக மிகவும் புத்திசாலித்தனமான விதத்தில் வழக்குத் தொடுக்கப்படுதல் வேண்டும். அதாவது, அனைத்து நபர்களினதும் மனித உரிமைகளைப் பேணிக் காத்தல் வேண்டும். தயவுசெய்து இதனை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்: தெளிவற்ற பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமொன்றின் கீழ் தவறான விதத்தில் தடுத்து வைக்கப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டு, துஷ்பிரயோகத்துக்குள்ளாக்கப்படும் அல்லது சித்திரவதைக்குள்ளாக்கப்படும் ஒவ்வொரு பிரஜையும் அதிகாரிகளுக்கெதிராக மனக்குறை ஒன்றை தனக்குள் சுமந்து கொண்டிருக்கும் ஒரு தனிநபராக மட்டும் இருந்து வரவில்லை; அதற்குப் பதிலாக அவர்களுடைய குடும்பத்தினர் பலரும் அவ்வாறான வடுக்களைச் சுமந்து கொண்டிருக்கின்றனர். ஒரு அப்பாவி நபரை சிறைக்கு அனுப்புங்கள்; அந்நிலையில் நீங்கள் 6 அல்லது 7 குடும்ப உறுப்பினர்கள் அரசாங்கத்தை எதிர்த்து நிற்பவர்களின் கைகளுக்குள் அனுப்புகின்றீர்கள். அவர்களில் ஒரு சிலர் அதற்கப்பாலும் கூட செல்ல முடியும். தவறாகத் தடுத்து வைத்திருப்பதன் மூலம் ஏற்படக்கூடிய இழப்பு, அதன்மூலம் கிடைக்கக் கூடுமென எதிர்பார்க்கப்படும் பயனிலும் பார்க்க மிதமிஞ்சியதாகயிருந்து வருகின்றது. வன்முறையுடன் கூடிய தீவிரவாத்தை எதிர்கொள்வதற்கு நாங்கள் அனைவரும் உறுதியாக நிற்க வேண்டும். அதற்கு எதிரான விடயத்தை தொடர்ந்து வலியுறுத்த வேண்டும்: சமாதானமாக அனைவரையும் உள்ளடக்கிக் கொள்ளல்.’’

முடிவு

***திரு. பென் எமர்சன்*** *(ஐக்கிய இராச்சியம்) பயங்கரவாத எதிர்ப்புச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொழுது மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்கள் என்பவற்றைப் மேம்படுத்தி, பாதுகாப்பது தொடர்பான விசேட அறிக்கையாளர் ஆவார். அவர் 2011 ஆகஸ்ட் மாதம் 1 ஆம் திகதி இப்பதவியைப் பொறுப்பேற்றதுடன், இப்பதவிக்கான பணிப்பாணை ஐக்கிய நாடுகள் அமைப்பின் முன்னைய மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் 2005 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டிருந்தது. இப்பணிப்பாணை 2007 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஐ நா மனித உரிமைகள் பேரவையினால் மூன்றாண்டு காலத்துக்குப் புதுப்பிக்கப்பட்டது. 2010 செப்டெம்பர் மாதத்திலும், மீண்டும் 2013 ஆம் ஆண்டு மாாச் மாதத்திலும் இப்பணிப்பாணை புதுப்பிக்கப்பட்டது.*

*விசேட அறிக்கையாளர்கள் என்பவர்கள் மனித உரிமைகள் பேரவையின் விசேட நடைமுறைகள் என அழைக்கப்படும் அமைப்பின் ஒரு பாகமாகயிருந்து வருகின்றனர். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கட்டமைப்பின் சுயாதீனமான நிபுணர்களைக் கொண்ட மிகப் பெரிய அமைப்பான விசேட நடைமுறைகள், சுயாதீனமாக விடயங்களைக் கண்டறிந்து, கண்காணிக்கும் பேரவையின் பொறிமுறைகளைக் குறிக்கும் ஒரு பொதுப் பெயராக இருந்து வருகின்றது. அது திட்டவட்டமான ஒரு நாடு தொடர்பான நிலைமைகளை அல்லது உலகின் அனைத்துப் பாகங்களிலும் தொனிப்பொருள் அடிப்படையிலான பிரச்சினைகளைக் கவனத்திலெடுத்து வருகின்றது. விசேட நடைமுறைகள் நிபுணர்கள் தொண்டு அடிப்படையில் பணியாற்றி வருகின்றார்கள். அவத்கள் ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஊழியர்களாகயிருந்து வரவில்லை. தமது பணிக்கென அவர்கள் ஒரு சம்பளத்தையும் பெற்றுக்கொள்ளவில்லை. ஏதேனும் அரசாங்கம் மற்றும் அமைப்புக்கள் என்பவற்றிலிருந்து அவர்கள் சுயாதீனமானவர்களாக இருந்து வருவதுடன் தனிப்பட்ட பொறுப்பில் செயற்பட்டு வருகின்றார்கள்.*

*பார்க்கவும்*

*UN 2006 Global Counter-Terrorism Strategy*

*ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள், இலங்கை தொடர்பான பக்கம் : Sri Lanka*

*மேலும், தகவல்கள் மற்றும் ஊடக வேண்டுகோள்கள் தொடர்பாகத் தயவு செய்து தொடர்பு கொள்ளவும் :*

***கொழும்பில் (விஜயத்தின் போது)*** *: திருமதி யூலியா றோ (+ 94 (0)11 2580691 ext. 2408 /* julia.raue@one.un.org

**ஜெனீவாவில் விஜயத்துக்கு (முன்னரும் பின்னரும்)** : ***(திரு சறொப் அஸிசோவ்)*** *(+41 22 917 9748 / sazizov@ohchr.org) எழுதவும் srct@ohchr.org*

ஐ நாவின் ஏனைய சுயாதீனமான நிபுணர்கள் தொடர்பான ஊடக விசாரணைகள்: சேர்பிய செலாயா, ஐ நா மனித உரிமைகள் ஊடகப் பிரிவு (+ 41 22 917 9383 / xcelaya@ohchr.org)

உங்கள் செய்தி இணையத்தளங்கள் மற்றும் வலைத்தளங்கள் தொடர்பாக: எமது செய்தி வெளியீடுகள் தொடர்பான பல்லூடக உள்ளடக்கம் மற்றும் முதன்மைச் செய்திகள் என்பன கீழே பட்டியலிடப்பட்டிருக்கும் ஐ நா மனித உரிமைகள் சமூக வலைத்தளங்களில் கிடைக்கின்றன. தயவுசெய்து பொருத்தமான இயக்கு கருவிகளைப் பயன்படுத்துவதன் மூலம் எம்முடன் தொடர்பு கொள்ளவும்:

Twitter: @UNHumanRights
Facebook: unitednationshumanrights
Instagram: unitednationshumanrights

Google+: unitednationshumanrights
Youtube: unohchr